**<u>20–வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 03.</u>**

தேதி 07.05.2026

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | – | C.C.No. 1938/2021 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா.1 |
| பெயர் | – | மதன கோபால் |
| தந்தை பெயர் | – | |
| முகவரி | – | |
| வயது | – | |

2023–ம் வருடத்திய பாரதிய சாக்சிய அதிநியம் வகையங்கள்படி இன்று 07.05.2026 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(வாதி ஆஜர். எதிரி ஆஜர் இல்லை மனு அனுமதிக்கப்பட்டது.)

**<u>நேரம்</u> :** 1.05 மணி.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பு.சா.ஆ 8 மற்றும் 9–ல் எனது தகப்பனார் எதிரிக்கு பணம் அனுப்பிய விவரமும் எதிரி எனது தந்தைக்கு பணம் திருப்பி செலுத்தியது குறித்த விவரமும் உள்ளது என்றால் சரிதான். எதிரி பணம் திருப்பி செலுத்தியது வட்டிக்காக ஆகும். பிரமாண வாக்குமூலத்தில் எதிரியிடம் எவ்வளவு வட்டி கோரப்பட்டது என்று தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. 14.05.2019, 16.05.2019 ஆகிய தேதிகளில் முறையே 50,000/– ரூபாயும், 1,00,000/– ரூபாயும் எனது தந்தை எதிரிக்கு கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். 25.05.2019 அன்று எதிரி எனது தந்தைக்கு 11,000/– ரூபாய் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

2. மேற்படி எ.சா.ஆ 1 மற்றும் 2 ன் கீழ் ஒரு மாதத்திற்குள்ளாக 22.06.2019 வரை எதிரி எனது தகப்பனாருக்கு ரூபாய் 1,00,000/–க்கு மேல் செலுத்திலுள்ளார் என்றால் சரிதான். மொத்தமாக எனது தந்தை எதிரிக்கு ரூபாய் 22,00,000/– கொடுத்தார். மே மாதம் வரை எனது தந்தை எதிரிக்கு ரூபாய் 3,50,000/– கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மொத்தமாக எதிரி எனது தந்தைக்கு 7,60,000/– ரூபாய் வட்டிக்காக செலுத்திலுள்ளார். வார வட்டி 6 சதவீதம் என்று தெரியும். அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. என்ன வட்டி கணக்கீட்டு ரூபாய் 7,60,000/– கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை.

**மேற்படி சாட்சியம், சாட்சி சொல்ல, சொல்ல என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி சாட்சியத்தை சாட்சிக்கு என் முன்பாக படித்துக்காண்பிக்கப்பட்டு, அவர் முழுமையாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.**

20–வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை–03.